**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.537/2019**

**வழக்கு சாட்சி.அ.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோக்லின்பாபு | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சுந்தரம் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2024**

முதல்விசாரணை

நான் தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், திருப்புரில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், ஈரோடு கேர் குடோனில் உதவி தர ஆய்வாளராக பணியாற்றியபோது, கடந்த 07.08.2016-ம் தேதி அன்று ஈரோடு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அவர்களால் 29 மூட்டைகளில் 1450 கிலோ புழுங்கல் அரிசியை பெற்று, அத்தாட்சி வழங்கினேன். அந்த அத்தாட்சி அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அரிசி மாதிரிகளை எடுத்து, நானே சோதனை செய்து, தரச்சான்று

வழங்கினேன். அந்த தர சான்றில் உதவி தர ஆய்வாளராக கையொப்பம் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் தற்போது என் முன்னிலையில் காண்பிக்கப் படும் தரச்சான்று தான் அதுவாகும். தரச்சான்று அ.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

நீங்கள் சொன்ன நேரத்தில் அரிசி மூட்டைகளைப் பெற்றுக் கொண்டு, அத்தாட்சி வழங்கவில்லை என்றாலும், விதிமுறைகளின் படி மாதிரிகளை சேகரம் செய்யவில்லை என்றாலும், உரிய நேரத்தில் அவை மண்டல பரிசோதனை மையத்திற்கு அனுப்பவில்லை என்றாலும், சரியல்ல. மாதிரி எடுக்கப்பட்டு 12 நாட்களுக்கு பின்னர் சோதனை செய்யப்பட்டதனால், அதில் ஈரப்பதம் மாற வாய்ப்புள்ளது என்றால், சரிதான். தரசான்றிதழில் பொது விநியோகத் திட்ட அரிசி என்பதை உறுதி செய்வதாக கூறப்பட்டுள்ள 4 காரணங்களில் 1,3,4 ஆகிய காரணங்கள் எந்தவொரு அரிசியையும் நீண்ட நாட்கள் இருப்பு வைத்திருக்கும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால், சரிதான். 2-வது காரணமான இரட்டை வேக்காடு செய்யப்பட்ட அரிசியை வெளிமாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு எடுத்து வர எந்தவொரு தடையும் இல்லை என்றால், சரிதான். முறையாக ஆய்வுகள் மேற்கொள்ளாமல், இந்த தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.